

கள்ளக்குறிச்சி நகராட்சி, தியாகதுருகம் சாலை வி.எம். திடலில் 3வது கல்லை புத்தகத் திருவிழாவினை தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 14.02.2025 – வெள்ளிக்கிழமை அன்று தொடங்கி வைத்து, புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்டுள்ள மாணவிகளிடம் புத்தகங்களின் பயன்கள் குறித்துக் கேட்டறிந்தார். அதுபோது மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம் செவலூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு பசுமை திட்டம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தொல்காப்பியர் பெரும் நாற்றங்கால் பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்து பார்வையிட்டார் . உடன் ஒன்றியச் செயலாளர் விவேகன்ராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### அதிகரித்து வரும் கடன் தொல்லை – பயிர் இழப்பு காரணமாக

# விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சிரமங்களை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

## மக்களவையில் – டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.17-

நாட்டில் விவசாயிகள் கடன் தொல்லை வருமானம் இழப்பு காரணமாக தற்கொலை செய்து இறப்பதை தடுக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

நாட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிதி உதவியை ஒன்றிய அரசு அதிகரித்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை? இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

அதிகரித்து வரும் கடன்கள் மற்றும் பயிர் இழப்பு காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சிரமங்களை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் விவசாயிகள் நெருக்கடியைத் தணிக்கவும் அவர்களின் உயிரைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? .

அதற்கு ஒன்றிய அரசின் விவசாய மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

விவசாயம் பொதுவாக மாநில அரசின் அதிகார வரம்புக்குள் உள்ள துறை. மேலும் இந்திய ஒன்றிய அரசு பொருத்தமான கொள்கை நடவடிக்கைகள் பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் பல்வேறு திட்டங்கள்/திட்டங்கள் மூலம் மாநிலங்களின் முயற்சிகளை ஆதரிக்கிறது. இந்திய ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்கள்/திட்டங்கள் உற்பத்தி ஊதிய வருமானம் மற்றும் விவசாயிகளுக்கு வருமான ஆதரவை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளின் நலனுக்காகவே உள்ளன.

2013-14-ஆம் ஆண்டில் ரூ.21933.50 கோடியாக இருந்த வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் (DA&FW) பட்ஜெட் ஒதுக்கீட்டை 2024-25ஆம் ஆண்டில் ரூ.1,22,528.77 கோடியாக அரசாங்கம் கணிசமாக உயர்த்தியுள்ளது.

விதைப்பதற்கு முன் முதல் அறுவடைக்குப் பின் வரை தடுக்க முடியாத அனைத்து இயற்கை ஆபத்துகளிலிருந்தும் விவசாயிகளுக்கு பயிர்களுக்கு விரிவான ஆபத்து காப்பீட்டை உறுதி செய்வதற்கும், போதுமான கோரிக்கை தொகையை வழங்குவதற்கும் எளிமையான மற்றும் மலிவு விலையில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை வழங்குவதற்காக பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) 2016 இல் தொடங்



கப்பட்டது.

இந்தத் திட்டம் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கிறது. காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இது உலகின் மிகப்பெரிய பயிர் காப்பீட்டுத் திட்டமாகும்.

விவசாயிகளின் ஒட்டுமொத்த வருமானத்தையும் விவசாயத் துறையில் ஊதிய வருமானத்தையும் மேம்படுத்துவதற்காக DA&FW ஆல் தொடங்கப்பட்ட சில முக்கிய திட்டங்கள்/ திட்டங்களின் சுருக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி

வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF)

நோக்கம்

சிறிய நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் ஒரே நோக்கத்துடன் பிரதமர் கிசான் சம்மன் நிதி திட்டம் 2019 இல் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் ஆண்டுக்கு ரூ.6000ஐ 3 சம தவணைகளில் வழங்குகிறது. இதுவரை தகுதியுள்ள விவசாயிகளுக்கு 18 தவணைகள் மூலம் ரூ.3.46 லட்சம் கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் உள்கட்டமைப்பு நிதி என்பது வட்டி மானியம் மற்றும் கடன் உத்தரவாத ஆதரவு மூலம் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை உள்கட்டமைப்பு மற்றும் சமூக விவசாய சொத்துக்களுக்கான சாத்தியமான திட்டங்களில் முதலீடு செய்வதற்கான நடுத்தரநீண்ட கால கடன் நிதி வசதியாகும்.

திட்டத்தின் கீழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் ஆண்டுக்கு 3% வட்டி மானியம் மற்றும் CGTMSE இன் கீழ் ரூ. 2 கோடி வரையிலான கடன்களுக்கு கடன் உத்தரவாதக் காப்பீடு மூலம் 1 லட்சம் கோடி ரூபாய் கடன்கள் வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு LGD குறியீடுகளில் அமைந்துள்ள 25 திட்டங்கள் வரை இந்தத் திட்டத்தின் பலனைப் பெற தகுதியுடையவை.

**புதிய 10,000 FPOS உருவாக்கம் மற்றும் ஊக்குவித்தல்**

இந்திய அரசு 2020ஆம் ஆண்டில் “10,000 விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்” என்ற மத்தியத் துறைத் திட்டத்தை (CSS) அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் மொத்த பட்ஜெட் செலவு ரூ.6865 கோடி ஆகும். FPOS உருவாக்கம் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவை இதன் மூலம் செய்யப்பட உள்ளன. செயல்படுத்தும் நிறுவனங்கள் (IAs), கிளஸ்டர் அடிப்படையிலான வணிக அமைப்புகளை (CBBOs) இணைத்து, 5 ஆண்டுகளுக்கு FPOக்களை உருவாக்கி அவர்களுக்கு தொழில்முறை ஆதரவு ஆதரவை வழங்குகின்றன.

பிரதான் மந்திரி அன்னதாதா சன்ரக்ஷன் அபியான் ஆஷா)

பிரதான் மந்திரி அன்னதாதா AI சன்ரக்ஷன் அபியான்) திட்டம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்கிறது மற்றும் விற்பனை நெருக்கடியைத் தடுக்கிறது. இது குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) பொறிமுறையை வலுப்படுத்துவதையும் விவசாயிகளுக்கு சிறந்த விலை ஆதரவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒன்றிய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டங்கள்!

(அ) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை (DA&FW) ராஷ்ட்ரியயா கிரிஷி விகாஸ் யோஜ்னா (RKVY) மற்றும் கிருஷோன்னதி யோஜனா (KY) என இரண்டு ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்துகிறது. RKVY நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதற்காகவும்> KY உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய தன்னிறைவை நிவர்த்தி செய்வதற்காகவும் உள்ளது. RKVY மற்றும் KY இன் கூறுகள் பின்வருமாறு:

i. ராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா:

ராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா விரிவான திட்ட அறிக்கை அடிப்படையிலான திட்டங்கள் (RKVYDPR)

ii. மண் ஆரோக்கியம் மற்றும் வளம் (SHF)

iii. மானாவாரி பகுதி மேம்பாடு (RAD)

iv. ஒரு துளிக்கு அதிக பயிர் (PDMC)

V பயிர் பல்வகைப்படுத்தல் திட்டம் (CDP),

vi. பரம்பரகத் க்ரிஷி விகாஸ் யோஜனா (PKVY)

vii. வேளாண் இயந்திரமயமாக்கல் மீதான துணைத் திட்டம் (SMAM)

viii. வேளாண்வனவியல் கி ரு ஷ் ே ண ா ன் ன ா தி யோஜனா

i. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து திட்டம் (NFSNM)

ii. தேசிய உண்ணக்கூடிய எண்ணெய்கள் மீதான திட்டம் (NMEO)எண்ணெய் பனை

iii.தேசிய உண்ணக்கூடிய எண்ணெய்கள் மீதான திட்டம் (NMEO)எண்ணெய் விதைகள்

iv.தோட்டக்கலையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான திட்டம் (MIDH)

v. ஒ ரு ங் கி ை ண ந் த வேளாண் சந்தைப்படுத்தல் திட்டம் (ISAM)

v i . வ ட கி ழ க் கு பிராந்தியத்திற்கான கரிம மதிப்பு சங்கிலி மேம்பாட்டு நோக்கம்

vii. வேளாண் விரிவாக்க துணை இயக்கம் (SMAE)

v i i i . டி ஜி ட் ட ல் வேளாண்மை

(ஆ). இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம்

விவசாய மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் நாடு முழுவதும் இயற்கை விவசாயத்தை ஒரு முழுமையான மத்திய நிதியுதவி திட்டமாக ஊக்குவிக்க இந்திய அரசு இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) ஐ தொடங்கியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### திருப்பத்தூர் ஒன்றியத்தில்

# விளையாட்டு உபகரணங்கள்!

## அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்பத்தூர்,பிப்.17-

துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக விளையாட்டு வீரர்கள், வீராங்களைகைள ஊக்கப்படுத்துவதுடன் விளை யாட்டுத்துறை மேம்படுத்தி வருகின்றார். அதன் விரிசையில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலுள்ள வீரர், வீராங்கனைகளுக்க உதவும் வகையில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்க ஆணையிட்டு தொகுப்புகள் ஒன்றிய அளவில் வழங்கப்பட்டது.

இன்று திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், கந்திலி ஒன்றியம் ஆகிய பகுதியிலுள்ள ஊராட்சி மன்ற தலைவர்களிடம் இந்த தொகுப்புகள் வழங்கும் விழா ஒன்றிய அலுவலகங்களில் நடைபெற்றது. திருப்பத்தூர் ஒன்றியத்தில் 34 ஊராட்சிகள் கந்திலி ஒன்றியத்தில் 39 ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல். ஏ வழங்கினார்கள்.

ஒன்றிய சேர்மென்கள். விஜயாஅருணாசலம், திருமதிதிருமுருகன், ஆகியோர் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலவர்கள் மணவாளன், ராஜேந்திரன், பிரேம்குமார், பிரேமாவதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் ஒன்றிய துணை சேர்மேன்கள். ஞானசேகரன், மோகன் குமார் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சிமன்ற தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். சிறப்பாக நடைபெற்ற இந்த விழாவில் ஊரகவளர்ச்சி அரசு அலுவலர்கள், கழக முன்னோடிகள், பொது மக்கள்,இளைஞர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம், மூக்கனூர் ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு சிறப்பு முகாம் அமைச்சர் எ.வ. வேலு வழிகாட்டுதல்படி திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கே.சதிஷ்குமார், சத்யாசதீஷ்குமார், ஸ்ரீதேவி, ஏழுமலை, ராஜேந்திரன், சாந்தன், புகழேந்தி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை.!

கடலூர், பிப். 17-

கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் கூட்டம் நடைபெறுவதை குறித்து கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை கீழ் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 21 மற்



றும் 22 ஆகிய தேதிகளில் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டும், மார்ச் 1ஆம் தேதி இந்தியாவின் முதன்மையான முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டும் செயல்வீரர்கள் கூட்டத்தில் ஆலோசனை வழங்க இருப்பதால் அதனை முன்னிட்டு விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் இன்று (17.02.2025- திங்கள் கிழமை) காலை 9 மணி அளவில் விருத்தாசலம் சிவபூஜா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. அது சமயம் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் , ஒன்றிய கழக, நகரக் கழக, பேரூர் கழக, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக சார்பு அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ரெயில்வே அமைச்சர் கவனத்திற்கு

# விழுப்புரம் - காட்பாடி இடையே இரட்டை வழி ரயில் பாதை!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 17-

விழுப்புரம் - காட்பாடி இடையே இரட்டை வழி ரயில் பாதையை அமைத்து பயணிகளின் சிரமத்தைக் குறைத்திடுவீர் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை ரெயில்வே அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்து வலியுறுத்தினார்.

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை பேசியதாவது:-

விழுப்புரம் - காட்பாடி இடையே உள்ள ரயில் பாதை என்பது ‘சிங்கள் லைன்’ என்று சொல்லப்ப



டுகிற ஒருவழிப் பாதையாகும். அதன் காரணமாக இடைப்பட்ட ஊர்களில் செல்ல வேண்டிய பயணிகள் ரயிலில் இடம் கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகிறார்.

ஒரே மார்க்கத்தில் ரெயில்கள் சென்றும் திரும்பியும் வருவதால் அதிக ரயில்கள் வருவதில்லை. போக்குவரத்திலும் தகவல் தொடர்புத் துறையிலும் நவீன யுகத்தில் நாம் இருக்கின்றோம். ஆனாலும் இங்கு ஒருவழிப் பாதையே இருந்து வருவது தரதிருஷ்டம்.

எனவே விழுப்புரம் - காட்பாடி மார்க்கத்தில் இரட்டை வழிப்பாதை - டபுள் லைன் - அமைக்கப் படுவது மிக மிக அத்தியாவசியமாகும்.

அவ்வாறு இரட்டை வழிப்பாதை அமைத்தால் அது, இடைப்பட்ட ஊர்களில் உள்ள பயணிகளுக்கு பயனாக இருக்கும் என்பதோடு, சேலம், கோவை, பெங்களூர், எர்ணாகுளம், திருச்சி, மதுரை உள்ளிட்ட பகுதிவாழ் மக்களுக்கும் அங்கு செல்ல வேண்டிய பயணிகளுக்கும் வெகுவாக பலன் கிடைக்க வாய்ப்புள்ளது.

ஒருவழிப்பாதை இருப்பதன் காரணமாக பயணிகள் குறித்த நேரத்தில் அவர்களுக்கான இடங்களுக்கு செல்ல முடிவதில்லை. இதுபற்றி பலமுறை ரயில்வே அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இனியும் காலதாமதமின்றி விழுப்புரம் - காட்பாடி இடையே இரட்டை வழிப்பாதையை அமைத்துத் தரும்படி ரயில்வே துறை அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து

# குடியாத்தத்தில் ரேஷன் கடை பயணிகள் நிழற்கூடம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் திறந்து வைத்தார்!

வேலூர், பிப்.17-

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி .எம் கதிர் ஆனந்த் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடியாத்தம் செதுக்கரை பகுதியில் ரேஷன் கடை மற்றும் எர்த்தாங்கல், பெரும்பாடி, மோடிக்குப்பம் பகுதிகளில் பயணிகளின் வசதிக்காக நிழற்கூடங்களை கட்டயப்பட்டது இதனை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த்திறந்து வைத்தார்.

நிகழ்சிக்கு ஒன்றிய கழக செயலாளர் உள்ளூர் ரவிதலமை தாங்கினார்.நகர மன்ற உறுப்பினர்கள் ஜி.எஸ்.அரசு, ம.மனோஜ்,அர்ச்சனாநவீன்

சங்கர், ஒன்றிய கழக செயலாளர் அன்பரசன் ஊராட்சி மன்ற தலைவர்கள் அம்மு நெடுஞ்செழியன்,ஆஷாதேவிசெழியன், லாவண்யா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன், நகராட்சி மன்ற தலைவர் எஸ்.சவுந்தராஜன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கலந்து கொண்டு ரேஷன் கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கினார்.

அதைத்தொடர்ந்து எர்த்தாங்கல், பெரும்பாடி, மோடிக்குப்பம், ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள நிழற் கூடங்களை திறந்து வைத்தார்.

பின்னர்அவர் பேசுகையில் குடியாத்தம் பகுதியில் மத்திய அரசின் சார்பில் கைத்தறி பூங்கா அமைக்கப் படும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம் சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, உத்திர குமாரி, அரசு மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினர் எம். சத்தியமூர்த்தி, முன்னாள் கூட்டுறவு வங்கி தலைவர் சந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ரஞ்சித்குமார், மனோகரன்,

கவுரப்பன்செல்வராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சங்கராபுரம் பேரூராட்சியில் 7வது வார்டு உறுப்பினர் உமா மகேஸ்வரி கணவரும், பேரூர்க் கழக துணைச் செயலாளருமான கோவிந்தன் அப்பகுதியில் மக்கள் பணி செய்து கொண்டிருக்கும் போது அதே பகுதியை சேர்ந்த வல்லரசு என்கிற நபர் அரிவாளால் வெட்டியதில் படுகாயம் அடைந்து கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார், இதனை கேள்விப்பட்ட அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று நலம் விசாரித்து ஆறுதல் கூறி அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்தார், அருகில் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன் ஆகியோர் உடன் சென்று நலம் விசாரித்தனர்.